செ.வெ.எண்.128 நாள்-10.2.2010

<u>செய்தி வெளியீடு – 10.2.2010</u>

## விழுப்புரம் அருகே கோனூர் கிராமத்தில் குளத்தில் மூழ்கி உயிரிழந்த இரண்டு சிறுவர்களின் குடும்பங்களுக்கு தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் ஒரு இலட்ச ரூபாய் நிவாரண உதவி !

# முதலமைச்சர் கலைஞர் ஆணை!

விழுப்புரம் வட்டம், கோனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. சிவகுமார் என்பவரின் 8 வயது மகன் அருண்குமார் மற்றும் திரு. சசிகுமார் என்பவரின் 5 வயது மகன் அஸ்வீன்குமார் ஆகிய இருவரும் விளையாடிவிட்டு, அருகிலுள்ள குடிநீர்க் குளத்தில் குளிக்கச் சென்றபொழுது, தண்ணீரில் மூழ்கி இறந்துவிட்டனர். இதுகுறித்த தகவல் உயர் கல்வித் துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி அவர்கள் மூலம் அறிந்ததும் மிகுந்த வருத்தமும், வேதனையும் அடைந்ததுடன், உயிரிழந்த சிறுவர்களின் குடும்பத்தாருக்குத் தமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, அவர்கள் ஒவ்வொருவரின் குடும்பத்திற்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் ஒரு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதியுதவி வழங்கிட முதலமைச்சர் கலைஞர் இன்று (10.2.2010) ஆணையிட்டுள்ளார்.

* * * * *

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9